**செய்தி வெளியீடு எண்:021** **நாள்: 08.01.2020**

<u>செய்தி வெளியீடு</u>

# தமிழ்க் கலைக்கழகத்தில் 552 கலைச்சொற்கள் ஆய்வு!

## பலதுறை அறிஞர்கள் பங்கேற்பு!

இன்றைய அறிவியல் தொழில்நுட்பக் காலத்தில் நாள்தோறும் புதுப்புதுத் துறைகள் உருவாகிவருவதால், அத்துறைகள் சார்ந்த சொற்களும் நாள்தோறும் புதுவரவாகப் பெருகி வருகின்றன. அவற்றிற்கெல்லாம் உடனுக்குடன் தக்க வகையில் தமிழ்க் கலைச் சொல்லாக்கம் செய்து புழக்கத்திற்குக் கொண்டுவந்தால்தான் பிறமொழிக் கலப்பின்றி நம்மொழியைக் காக்க முடியும்; மேலும் நம்மொழியின் சொல்வளத்தையும் பெருக்க முடியும்.

இந்த உயரிய நோக்கத்திற்காகச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தில் 21.11.2016–இல் **“தமிழ்க் கலைக்கழகம்”** என்ற அமைப்பைத் தமிழ்நாடு அரசு தோற்றுவித்தது. இக்கலைக்கழகத்தில், அலுவல்சார் உறுப்பினர்கள் 4 பேர், அலுவல்சாரா உறுப்பினர்கள் 5 பேர் மற்றும் மதிப்புறு உறுப்பினர்கள் 30 பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.

31.12.2018 வரை மாதம் ஒரு கூட்டம் என்ற வகையில் 28 கூட்டங்கள் நடைபெற்றன. இந்நிலையில், மொழிவளர்ச்சிக்கான ஆக்கப் பணியாக விளங்கிடும் தமிழ்க் கலைக்கழகத்தின் செயல்பாட்டுத் தேவையை உணர்ந்த தமிழக அரசு 2018–2019–ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பில், ‘‘செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தில் செயல்பட்டு வரும் தமிழ்க்கலைக்கழகமானது மாதமொன்றுக்கு ஆயிரம் தமிழ்க் கலைச்சொற்களை வடிவமைத்து வெளியிடும் வகையில், தொடர் செலவினமாக ஆண்டுக்கு ஒரு இலட்சத்து ஐம்பத்தாறாயிரம் (ரூ.1,56,000/–) செலவில் புதுப்பிக்கப்படும்’’ என்று அறிவித்து அரசாணை வெளியிட்டது. அவ்வரசாணைக்கிணங்க 01.01.2019 முதல் மாதம் இரு முறை கலைக்கழகக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இக்கூட்டங்களில், அகரமுதலிப் பதிப்பாசிரியர்கள், உதவிப் பதிப்பாசிரியர் மற்றும் தொகுப்பாளர்கள் ஆகியோர் மக்களின் நடைமுறை வாழ்க்கையிலும், பேச்சு வழக்கிலும், ஊடகத்துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் வழங்கப்படும் பிறமொழிக் கலைச்சொற்களைத் தொகுத்து அவற்றிற்குத் தாங்களே வடிவமைக்கும் தமிழ்க் கலைச்சொற்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

இச்சொற்களை அகராதியியல் அறிஞர்கள், மொழியியல் வல்லுநர்கள், தமிழறிஞர்கள், கணினி வல்லுநர்கள், இதழியலாளர்கள், மருத்துவத்துறையினர் உள்ளிட்ட பலதுறை அறிஞர்களைக் கொண்ட தமிழ்க் கலைக்கழகத்தின் வல்லுநர் குழு ஆராய்ந்து சீர் செய்து ஒப்புதலளித்த பின், அரசாணை பெறப்பட்டு, **"sorkuvai.com"** என்ற வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டுக்கு வழங்கப்படுகின்றன.

இந்நிலையில், 10.01.2020 வெள்ளிக்கிழமையன்று செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தில் 'தமிழ்க் கலைக்கழகத்தின் 53–ஆவது கூட்டம் காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 வரை நடைபெறவுள்ளது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக இயக்குநர் திரு. தங்க. காமராசு அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்களாக முனைவர் தியாக. இளங்கோவன், தலைவர் சென்னை தமிழ்ச்சங்கம், திரு. த. திருமாறன், நிறுவனர் உலகத்தமிழர் மையம், சென்னை, சிறப்பு நோக்கராக முனைவர் அண்ணாகண்ணன், நிறுவனர் 'வல்லமை' மின்னிதழ், நோக்கர் மொழி ஆய்வகம் ஆகியோர் கலந்துகொள்ள உள்ளனர்.

தமிழ்க் கலைக்கழகத்தின் மதிப்புறு உறுப்பினர்கள், அலுவல்சார், அலுவல்சாரா உறுப்பினர்கள் மற்றும் விலிங்டன் சீமாட்டி கல்வியியல் கல்லூரி மாணவிகள் உள்ளிட்டோர் பங்கேற்கவுள்ள இக்கூட்டத்தில் 552 கலைச்சொற்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளன.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**